ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2382/02 - 2024 අප්‍රේල් මස 29 වැනි සඳුදා - 2024.04.29
2382/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/ 2003*

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டம்**

*2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 8, 10, 11 மற்றும் 12 ஆகிய பிரிவுகளுடனும் அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சனாதிபதி.*

கொழும்பு,
*2024, ஏப்பிறல் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*2002, திசெம்பர் 15 ஆந் திகதிய 2310/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான, 2002, ஒற்றோபர் 20 ஆந் திகதிய 2302/ 23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலக் கொடுப்பனவு (கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர் களாகவுள்ள ஆட்களைத் தெரிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*

(1) அதன் 4 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியில், "இலத்திரனியல் ரீதியிலும் வேறுவகையாகவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலத்திரனியல் ரீதியாக அல்லது வேறுவகையாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

1A - PG 6708 — 454 (2024/04)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அதன் (3) ஆம் உப ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(3) ஒவ்வொரு தெரிவுக்குழுவும் மூன்று ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர்களுள் -

(அ) ஒருவர், தெரிவுக்குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய பின்வரும் ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் :-

(i) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் இயைபான பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உதவிப் பிரதேச செயலாளர் ;

(ii) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் இயைபான பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ;

(iii) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் இயைபான பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள கணக்காளர் ; அல்லது

(iv) இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் பதவிநிலை தரத்திலுள்ள பகிரங்க அலுவலர் ; அத்துடன்

(ஆ) இருவர், இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பின்வரும் ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் :-

(i) சமூக சேவை அலுவலர் ;

(ii) முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் ;

(iii) குடியேற்ற அலுவலர் ;

(iv) சமுர்த்தி முகாமையாளர் ;

(v) நிருவாக கிராம அலுவலர் அல்லது ;

(vi) நிருவாக அலுவலர்.".

(ஆ) அதன் (8) ஆம் உப ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(8) வெளிப்படுத்துகையில் வழங்கப்பட்ட விபரங்களின் செம்மையைப் பரீட்சிக்கும் மற்றும் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக விண்ணப்பதாரர்களின் தரவுகளைச் சேகரித்து அத்தகைய தரவுகளை வைத்திருக்கும் கடமையைப் புரிகின்ற (இதனகத்துப் பின்னர் "எண்ணீட்டாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரினால் ஈடுபடுத்தப்பட்ட கிராம அலுவலர் அல்லது எவரேனும் வேறு கள அலுவலர், சட்டத்தின் நோக்கத்துக்காக அவசியமாகக்கூடியவாறாக விண்ணப்பதாரரின் வதிவிடத்துக்கு விஜயம் செய்தல் வேண்டும்.";

(இ) அதன் (10) ஆம் உப ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் உப ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(11) உப ஒழுங்குவிதி (10) இன்கீழ் நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகவுடைய ஆட்களின் பெயர்ப்பட்டியலை இற்றைப்படுத்தும் நோக்கத்துக்காக சட்டத்தின் 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

(3) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அதன் (3) ஆம் உப ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) எந்தப் பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பில் மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்படுகின்றதோ அந்தப் பிரதேச செயலாளர் பிரிவுக்குக் குறித்தளிக்கப்பட்ட பிரதேச செயலாளர் அல்லது இயைபான மாவட்டத்தின் வேறெந்தப் பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பில் மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்படுகின்றதோ அந்த வேறேதேனும் பிரதேச செயலாளர் பிரிவுக்குக் குறித்தளிக்கப்பட்ட பிரதேச செயலாளர் ஒருவர்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக, "பிரதேச செயலாளர்" என்பது, பதில் பிரதேச செயலாளர் ஒருவரை அல்லது பிரதேச செயலாளரின் கடமைகளைப் புரிகின்ற அலுவலர் ஒருவரை அல்லது இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பதவிநிலை தரத்திலுள்ள பகிரங்க அலுவலர் ஒருவரையும் உள்ளடக்குகின்றது ;";

(ஆ) அதன் (3) ஆம் உப ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஆ) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் தெரிவுக் குழுவில் உள்ளடக்கப்படாதோராகவும், இயைபான பிரதேச செயலகத்தில் அல்லது அத்தகைய மாவட்டத்தில் சேவையாற்றுவோராகவும் உள்ள பதவிநிலை தரத்திலுள்ள இரண்டு பகிரங்க அலுவலர்கள் ; அத்துடன்".

(4) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அதன் (2) ஆம் உப ஒழுங்குவிதியில், "பத்து வாரங்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து நாட்களினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (3) ஆம் உப ஒழுங்குவிதியில், "ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆட்சேபனை அல்லது கோரிக்கை பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களினுள் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

EOG 04-0235

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.